தமிழ்நாட்டில் இடம் கிடைத்துவிடாதா என்று காத்துக்கொண்டிருக்கிறது பா.ஜ.க.!

இது பெரியார் மண்; ஒரு தூசி கூட கிடைக்காது!

தென்காசியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தென்காசி, ஜூன் 13-

இது பெரியார் மண்; இந்தப் பெரியார் மண்ணில் இருந்து தூசியைக் கூட பா.ஜ.க.வினர் எடுத்துச் செல்ல அனுமதிக்க கூடாது என தென்காசி கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி சூளுரையாற்றினார்.

தென்காசி மாவட்டம், கடையத்தில் தென்காசி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில், தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, நலத் திட்ட உதவிகளை வழங்கினார்!

தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ. சிவபத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

அந்தப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:-

"தலைவர் கலைஞர் நூற்றாண்டு கொண்டாட்டங்களில் தலைவர் கலைஞரைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முதலமைச்சர் தொடங்கி மேடையில் ஏறும் அத்தனை பேரும் தலைவர் கலைஞரைப் பற்றி புகழ் பாடிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் இன்னும் தலைவர் கலைஞரைப் பற்றி பேச புதிய புதிய செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன.

பேசப் பேச தீராதவர் கலைஞர்!

அடியும் முடியும் காண முடியாதவர் என்று நம்பிக்கை உள்ளவர்கள் கடவுளைப் பார்த்துதான் சொல்லுவார்கள். அதேபோல அடியும் முடியும் காண முடியாத தலைவர் இருக்கிறார் என்றால் அவர் தலைவர் கலைஞர் ஒருவராகத்தான் இருக்க முடியும். அவரைப் பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம், அவரைப் பற்றிய செய்திகள் சொல்லிக் கொண்டே இருக்கலாம். அவர் சந்தித்த மனிதர்கள் பற்றி பேசிக் கொண்டே இருக்கலாம். மக்களுக்காக அவர் அளித்த திட்டங்கள் பற்றி எடுத்துச் சொல்லலாம்.

அவர் எழுதியிருக்கிற திரைப்படங்களைப் பற்றிப் பேசலாம், நாடகங்களைப் பற்றிப் பேசலாம், கவிதைகளைப் பற்றி பேசலாம், உடன் பிறப்புகளுக்கு அவர் எழுதிய கடிதங்கள் பற்றிப் பேசலாம். பேசப் பேச தீராத ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் தலைவர் கலைஞர் மட்டும்தான்.

பிறந்ததில் இருந்து தலைவர் கலைஞரோடே இருக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்ற சிலரில் நானும் ஒருவள். தினம் நாம் பார்த்த ஒருவரைப் பற்றி சிந்தித்துப் பார்க்கும்போது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இத்தனை சாதனைகளை ஒரு மனிதர் தன் வாழ்நாளில் சாதித்திருக்க முடியுமா? இத்தனை துறைகளில் சாதித்திருக்க முடியுமா என்று என்னாலேயே நம்ப முடியவில்லை.

சற்று யோசித்துப் பாருங்கள்... தன்னுடைய 13 ஆவது வயதிலே அவர் கையெழுத்துப் பத்திரிகையை தொடங்குகிறார். தன்னுடைய கருத்துகள் மக்களுக்கு சென்று சேர வேண்டும் என்பதற்காக கையெழுத்து பத்திரிகையை தொடங்கி, ஒவ்வொரு பக்கத்தையும் தானே எழுதி அதை நகல் எடுத்து அதை விநியோகம் செய்து தன் கொள்கையை, தன் தலைவரின் கருத்துகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கிறார். நாடகங்கள் எழுதத் தொடங்குகிறார். அதேநேரத்தில் அரசியலில் ஈடுபடுகிறார். போராட்டங்களுக்கு செல்கிறார், திரைப்படங்களில் வசனம் எழுத வருகிறார்.

காலத்தைக் கடந்தவர் கலைஞர்!

நமக்கு ஒரு சினிமா என்றால் ஹீரோ, ஹீரோயின் தான் தெரியும். அதில் இருக்கும் நடிகர்களைத்தான் நாம் தெரிந்துகொண்டிருப்போம். ஆனால் டைட்டில் கார்டில் வசன கர்த்தா என்று பெயர் வரும்போது அந்த தியேட்டரே அதிரும்படி எழுந்து கைதட்டிய மக்கள் இருந்தார்கள் என்றால் அது தலைவர் கலைஞருக்காக மட்டும்தான்.

நான் நிறைய பேர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். பராசக்தி வந்தபோதெல்லாம் வசனங்களுக்காகவே ஓடியது, மக்கள் அப்படி ஒரு ஆரவாரத்தோடு அந்த வசனங்களை ரசிப்பார்கள் என்று. நமது மகளிரணி சார்பில் சென்னையிலே உட்லேண்ட்ஸ் திரையரங்கிலே தலைவருடைய நூற்றாண்டு விழாவுக்காக பராசக்தியை மீண்டும் திரையிட்டோம். முதல் முறை திரையிட்டபோது எப்படி ரசித்தார்களோ, அதே அளவுக்கு இப்போது நமது சகோதரிகள் கைதட்டி ஆரவாரத்தோடு ரசித்தார்கள். இத்தனை ஆண்டுகள் தாண்டியும் காலத்தைக் கடந்த வசனத்தை எழுதக் கூடியவர் ஒருவர் உண்டென்றால் அவர் தலைவர் கலைஞர் மட்டும்தான்.

திரைப்படங்களில் அவர் செய்திருக்கக் கூடிய சாதனைகள், நாடகங்களில் அவர் செய்திருக்கக் கூடிய சாதனைகள், சரித்திர நாவல்களில் செய்திருக்கக் கூடிய சாதனைகள் சரித்திர நாவல்கள் என்றால் சாதாரணமானவை அல்ல... எவ்வளவோ படிக்க வேண்டும், சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்... அதைத் தாண்டி சமூக நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், மேடைப் பேச்சு, மக்களிடம் பேசுவது, கழகத் தோழர்களிடம் பேசி அவர்களின் பிரச்சினைகளை சரி செய்வது, தன் தொகுதி மக்களுக்கான பிர்ச்சினைகள், முதல்வர் பொறுப்பை ஏற்ற போது மாநில மக்களுக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் காட்டுவது, தேசிய அரசியலில் தலைவர்களோடு பேசி இந்த நாடு எந்த திசையில் செல்ல வேண்டும், யார் பிரதமர், யார் குடியரசுத் தலைவர் யார் வர வேண்டும் என்று நிர்ணயிக்கும் அளவுக்கு தேசிய அளவிலே தன்னை நிறுவிக் கொண்ட ஒரு தலைவர்

இத்தனை பரிமாணங்களை வெற்றிகரமாக ஒரு மனிதர் வாழ்ந்து காட்ட முடியுமா என்று ஒவ்வொரு நாளும் நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது

கலைஞரின் வெற்றிக்கு இரு காரணங்கள்!

இவற்றுக்கு அடிப்படையானவை இரண்டு விஷயங்கள். ஒன்று அவருக்குள் இருந்த மனித நேயம். ஜாதி, மதம், ஆண், பெண் என்று எந்த வித்தியாசமும் இல்லாமல் மனிதர்களை நேசித்தவர் அவர். ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட எல்லோரும் இந்த சமூகத்தில் சமம் என்று நினைத்தவர் தலைவர் கலைஞர். இன்னொரு முக்கியமான அம்சம் அவரது உழைப்பு. தலைவர் கலைஞர் காலை நாலரை மணி முதல் 5 மணிக்குள் எழுந்து விடுவார்கள். பத்திரிகைகளை படித்து விடுவார். நடை பயிற்சியை முடித்து விடுவார்.

கழகத் தோழர்களோடு நடக்கும்போது நாட்டுக்கு என்ன தேவை புதிய திட்டங்கள் என்ன கொண்டு வரலாம் என்று பேசிக் கொண்டே நடக்கும் நடை பயிற்சி. அதை முடித்துவிட்டு தான் பத்திரிகைகளிலே படித்த செய்திகள் தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அந்தத் திட்டமிடல். பிறகு குளித்து முடித்து சாப்பிட்டு விட்டு யாரை எல்லாம் சந்திக்க வேண்டுமோ அவர்களை சந்தித்து... அலுவலகத்திற்கு சென்று அங்கே எடுக்க வேண்டிய அந்த முடிவுகளை எல்லாம் எடுத்து... இதற்கு நடுவில் அறிவாலயத்துக்கு சென்று அங்கே கழகத் தோழர்களை சந்தித்து விட்டு வீட்டுக்கு வந்து... மறுபடியும் மாலையிலே நிகழ்ச்சிகள் கூட்டங்கள் இரவு 10 மணி வரை கழகத் தோழர்களோடு பேசி கட்சிக்கான விஷயங்களை செய்து என்று ஒவ்வொரு நாளும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருந்தவர் தலைவர் கலைஞர்.

அன்றாடம் தன்னை அப்டேட் செய்துகொள்ளும் தலைவர்!

தமிழ்நாட்டில் தலைவர் கலைஞரின் கால் படாத ஒரு ஊர், ஒரு தெரு இருக்கிறது என்று யாரும் சொல்லி விட முடியாது. நாங்கள் அவரோடு பயணம் செய்யும்போது எத்தனையோ இடங்களில்... 'நான் இந்த திண்ணையில் படுத்து தூங்கி இருக்கேன். நான் இந்த தெருவில் நடந்து போயிருக்கிறேன். நான் இந்த ஆற்றை கடந்து சைக்கிளில் போயிருக்கேன்' என்று எங்களிடம் சொல்லக்கூடிய அளவுக்கு உழைத்திருக்கக்கூடிய தலைவர்.

ஒரு புதிய விஷயத்தை தெரிந்து கொள்வதில் தலைவர் கலைஞருக்கு இருக்கும் ஆர்வம் வேறு யாருக்கும் இருக்க முடியாது. புத்தகங்களை தன் வாழ்நாள் முழுவதும் நேசித்த ஒரு தலைவர். சுண்டல் மடித்து வரும் காகிதத்தைக் கூட பிரித்து படிக்காமல் தூக்கி போட மாட்டார். அதிலேயே ஏதாவது ஒரு புதிய விஷயம் இருக்கிறதா என்று தேடக் கூடிய ஒரு தலைவர்.

நாடகக் கலை அதற்குப் பிறகு திரைப்படங்கள் ஏன் தொலைக்காட்சியிலே கூட தலைவர் கலைஞர் எழுதிய நாடகங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தொடர்ந்து அப்டேட்டில் இருந்த தலைவர். ட்விட்டரில் இருந்த தலைவர். ஒரு புது விஷயம், கற்றுக் கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று அவர் சிந்தித்ததில்லை. முழுமையாக அதை தெரிந்து கொள்ள வேண்டும், அந்த தளத்திலும் இயங்க வேண்டும் என்று நினைத்த ஒரு தலைவர்.

தலைவர் கலைஞரின் வாழ்வே நமக்கு உதாரணம்!

இதை ஏன் நான் இங்கே சொல்கிறேன் என்றால், இங்கே பல இளைஞர்கள் இருக்கிறீர்கள். நாம் நினைப்பதெல்லாம் உடனே கிடைத்து விட வேண்டும், ஒரே நாளில் நடந்து விட வேண்டும் என்றெல்லாம் சிலர்

நினைப்பீர்கள். தலைவருடைய வாழ்க்கையையே உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இங்குள்ள சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் நான் சொல்ல விரும்புகிறேன்.

வேலை கிடைப்பதற்கு எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். அந்த வேலை கிடைக்க வேண்டும் என்றால் உங்களை சுற்றி என்ன நடக்கிறது என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அப்டேட் ஆக இருக்க வேண்டும் .இன்றைய டெக்னாலஜி என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே கல்லூரிக்கு போகக்கூடிய மாணவ மாணவிகள் இருக்கிறீர்கள். உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை நீங்கள் உள்வாங்கிக் கொண்டால்தான்... உங்களுக்கு இந்த சமூகத்தில் மதிப்பு, தேவை, மரியாதை இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல வீட்டில் இருக்கக்கூடிய சகோதரிகள் ஆனாலும் சரி... என் காலமெல்லாம் போய்விட்டது... இனி மேல் இதை நான் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவசியமில்லை. வாட்ஸ் அப், சோசியல் மீடியா பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று தயவு செய்து நினைக்காதீர்கள்.

தமிழ்நாட்டின் மீது வாட்ஸ் அப் படையெடுப்பு!

அந்த வாட்ஸ் அப்பின் வழியாகத்தான் சோசியல் மீடியா வழியாகத்தான் தமிழ்நாட்டின் எதிரிகள் நம் மீது படை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு பொய் செய்திகள். ஏதேதோ சொல்லுவார்கள்... எங்கே படித்தீர்கள் என்று கேட்டால் வாட்ஸ் அப்பில் படித்தேன் என்று பதில் கூறுவார்கள். வாட்ஸ் அப்பில் வந்தால் எல்லாம் உண்மை அல்ல. அதில் எவ்வளவு பொய் இருக்கிறது என்பதை புரிந்து கொள்வதற்கு நாம் சோசியல் மீடியாவை புரிந்து கொள்ள வேண்டும். அதையும் புரிந்து கொண்ட தலைவர் தான் நமது தலைவர் கலைஞர்.

இதனால் கலைஞரைப் போல் காலத்துக்கேற்ற விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பார்க்காத எதிரிகள் இல்லை. தன்னுடைய வாழ்க்கையிலே எத்தனையோ எதிரிகளை தாண்டி வந்திருக்கக் கூடிய ஒரு தலைவர் கலைஞர்.

பரம்பரைப் பகை ஏன்?

ஒரு முறை அம்மையார் ஜெயலலிதா சொன்னார்... இது பரம்பரை பகை என்று. அதாவது திமுகவுக்கு அதிமுகவுக்கும் இருப்பது பரம்பரைப் பகை என்றார் ஜெயலலிதா. அது என்ன பரம்பரை பகை? ஒரு காலகட்டத்திலே உங்கள் கைகளிலே எல்லாம் இருந்தது. நிலம் உங்கள் கைகளில் இருந்தது. கல்வி உங்கள் கைகளிலே இருந்தது. வேலைவாய்ப்புகள் உங்கள் கைகளில் இருந்தது. இந்த சமூகத்தில் அந்தஸ்து, மரியாதை எல்லாம் உங்கள் கைகளிலே இருந்தது. பணம் உங்கள் கைகளிலே இருந்தது.

நாங்கள் உங்களிடம் கைகட்டி வேலை பார்க்கக் கூடிய நிலை. நாங்கள் படிக்கக் கூடாது... நாங்கள் நிலத்துக்கு சொந்தம் கொண்டாட கூடாது. வேலைவாய்ப்புகள் எங்களுக்கு மறுக்கப்பட்டன. இப்படிப்பட்ட ஒரு நிலையிலேயே இருந்தோம்.

திராவிட இயக்கம் உருவான பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உருவான பிறகு... இன்று தளபதி சொல்கிறாரே இந்த திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, நிலை மாறியது.

நாம் பள்ளிகளில் படித்தோம். நமக்கு நிலம் சொந்தமானது. சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் யாரிடமும் கைகட்டி நிற்க வேண்டும் என்ற நிலை மாறியது. நமக்கான உரிமைகள் கிடைத்தது. சரித்திரத்தின் எந்த பக்கத்தை திருப்பி பார்த்தீர்கள் என்றாலும்... பெண்களுக்கு ஓட்டுரிமை வாங்குவதற்காக எத்தனை பெண்கள் அடிப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார்கள்.

எதுவும் இல்லாமல் திராவிட இயக்கம் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்தது. இந்தியாவிலேயே முதன்முறையாக பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்தது தமிழ்நாடு. ஆகவே இந்த மாற்றங்களை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை சகித்துக் கொள்ள முடியவில்லை.

தலைவர் கலைஞரும் பெண் கல்வியும்!

இங்கே தனுஷ் குமார் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டு சொன்னார். பெண்கள் என்றால் படிக்க வேண்டாம்... அவர்கள் இன்னொரு வீட்டுக்கு செல்லக் கூடியவர்கள் தானே அவர்களை படிக்க வைக்க வேண்டாம் என்ற நிலை இருந்தது. அப்படியே பெண்களை படிக்க வைத்தாலும் வீட்டில் கஷ்டமாக இருந்தால் முதலில் நிறுத்தப்படுவது பெண்களின் படிப்பு தான். இதை மாற்றத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பெண் பிள்ளைகள் எட்டாவது வரை படித்தால் திருமண உதவித் தொகை அறிவித்தார். எட்டாவது வரை படிக்க வைத்து விட்டால் திருமண செலவை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார் கலைஞர். அதன்பிறகு பத்தாவது வரை என்று உயர்த்தினார். பத்தாவது வரை படிக்க வைத்தால் அந்த பெண் பிள்ளைகள் எப்படியாவது பள்ளி படிப்பை முடித்து கல்லூரிக்கு சென்று விடுவார்கள்.

கல்லூரிக்கு வந்துவிட்டால் முதல் தலைமுறையாக கல்லூரி வருபவர்களுக்கு நான் உயர்கல்வியை இலவசமாக தருகிறேன் என்று சொன்ன ஆட்சி நமது தலைவர் கலைஞருடைய ஆட்சி.

தலைவர் கலைஞரின் உயர்கல்விப் புரட்சி!

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இத்தனை கல்லூரிகளை உருவாக்கி காட்டியவர் கலைஞர் தான். உயர்கல்வியில் இன்று இந்தியாவின் சதவிகிதத்தை விட தமிழ்நாட்டின் உயர் கல்வி விகிதம் அதிகம். இன்னும் 30 வருடம் கழித்தாவது தேசிய அளவில் உயர்கல்வி கற்றவர்கள் 50 சதவீதமாக இருக்க வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கம் கனவு கண்டு கொண்டிருக்கிறது. ஆனால் அந்தக் கனவை தமிழ்நாட்டில் இன்று நிறைவேற்ற வழிகாட்டி இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள்.

கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு செல்ல வேண்டும். வெகுதூரம் என்றால் பெண்களை கல்வி கற்க அனுப்ப மாட்டார்கள். கிராமங்களில் இருந்து பத்து நிமிடங்களில் கல்லூரி அடையும் அளவுக்கு கல்லூரிகளை அமைத்துக் காட்டுகிறேன் என்று அமைத்துக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

வசதி வாய்ப்பற்ற குடும்பங்கள் ஹாஸ்டலில் தங்கி படிக்க முடியாது. அப்படி இருக்கக் கூடிய இளைஞர்கள் படிக்கும் வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்பதற்காக உங்கள் வீட்டுக்கு பக்கத்திலேயே கல்லூரிகளை உருவாக்கி கிராமங்களில் சிற்றூர்களில் கல்லூரிகளை உருவாக்கி... உயர்கல்வியில் 50% தாண்டி காட்டிய தலைவர் கலைஞர் அவர்கள். இன்று தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டோம் என்றால் ஒவ்வொரு துறையிலும் மருத்துவமாக இருக்கட்டும் கல்லூரி படிப்பாக இருக்கட்டும் வேலைவாய்ப்புகள் ஆக இருக்கட்டும்... எல்லாவற்றிலும் விஞ்சி நிற்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்றால்... தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் தான் காரணம்.

தலைவர் கலைஞரின் மின்சாரச் சாதனை!

பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தை கொடுத்து விட்டேன் என்று மிகப் பெருமிதமாக சொல்லிக் கொண்டார். இதை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே தனது ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்சார வசதி இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கி காட்டியவர் தலைவர் கலைஞர்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்தவர் கலைஞர் அவர்கள். அவர் அந்தத் திட்டத்தை கொண்டு வரவில்லை என்றால் தமிழ்நாட்டில் விவசாயமே இல்லாமல் போயிருக்கும். விவசாயத்தை காப்பாற்றிய தலைவர் கலைஞர். விவசாயிகளுக்கு கொடுத்த இலவச மின்சாரத்தை கடந்த 10 ஆண்டுகள் ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள். இங்கே நமது மாவட்ட செயலாளர் பேசியது போல மறுபடியும் தளபதி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான்... இரண்டு லட்சத்துக்கு அதிகமான விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது.

தமிழ் சமூகத்தைத் தட்டி எழுப்பிய தொலைக்காட்சிப் பெட்டிகள்!

இப்படியாக யாருக்கு என்ன தேவை என்று அறிந்து விவசாயிகளாக இருக்கட்டும், உழைக்கக் கூடியவர்களாக இருக்கட்டும், பெண்களாக இருக்கட்டும்... பெண்களுக்கு இலவச கேஸ் ஸ்டவ் வழங்கிய தலைவர் கலைஞர். வண்ண தொலைக்காட்சி பெட்டி தருவேன் என்று தேர்தல் வாக்குறுதி தந்தார்கள். யாருமே நம்பவில்லை. கிட்டத்தட்ட இரண்டு கோடி குடும்பங்களுக்கு எப்படி இலவச டிவி கொடுக்க முடியும் என்று கேள்விகள் கேட்டார்கள். ஆனாலும் மக்கள் தலைவரது வாக்குறுதியை நம்பி வாக்களித்தார்கள். ஆட்சிக்கு வந்த கலைஞர் சொன்னபடியே இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை தந்தார். இன்னும் அந்த டிவி ஓடிக் கொண்டிருக்கிறது.

அந்த தொலைக்காட்சி பெட்டிகள் வந்த பிறகு வேறு யார் வீட்டுக்கும் போய் நீங்கள் டிவி பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல சின்ன சின்ன கிராமங்களில் கூட உலகத்தைப் பற்றிய செய்திகளை தெரிந்து கொள்வதற்கு... மலை கிராமங்களில் இருப்பவர்களுக்கு கூட இந்த நாட்டில் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார் தலைவர் கலைஞர்.

இந்த டிவியை பார்த்து... உலகத்தில் இத்தனை பேர் இப்படி எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நாமும் நன்றாக வாழ வேண்டும் என்ற உணர்வை கொடுத்து தமிழ் சமூகத்தை தட்டி எழுப்பியது அந்த வண்ணத் தொலைக்காட்சி பெட்டி தந்த தலைவர் கலைஞர்.

இப்படி தொலைநோக்கு கொண்ட எத்தனையோ திட்டங்களை தமிழ் மக்களுக்காக உருவாக்கிக் காட்டியவர் தலைவர் கலைஞர். பேசுவது என்றால் பேசிக் கொண்டே போகலாம்.

உரிமைப் போராட்டங்களை மறக்கக் கூடாது!

நமக்கு கிடைத்து இருக்கக்கூடிய விஷயங்கள் பழகிவிட்டதென்றால் வெகு சுலபமாக அவை வந்த வழிகளை மறந்து விடுகிறோம். கடந்து போய் விடுகிறோம். எல்லா இடங்களிலும் பள்ளிகளை கட்டி வைத்து இருக்கிறோம். எல்லா இடங்களிலும் கல்லூரிகளைக் கட்டி வைத்திருக்கிறோம். அவற்றையெல்லாம் மூடி விடுங்கள் ஒரே இடத்தில் அனைவரும் வந்து படிக்கட்டும் என்று சொல்வது தான் தேசிய புதிய கல்விக் கொள்கை.

இத்தனை ஆண்டுகளாக நாம் கட்டி எழுப்பி இருக்கக்கூடிய அனைவருக்கும் அடிப்படை கல்வி என்பதை அடித்து நொறுக்கக்கூடிய அரசாங்கம் ஒன்றியத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

அதனால் இதெல்லாம் நாம் மறந்து விடக் கூடாது. எவ்வளவு கஷ்டப்பட்டு நமது உரிமைகளை நாம் வாங்கி இருக்கிறோம் பெற்றிருக்கிறோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் கையில் இப்போது என்னென்ன உரிமைகள் இருக்கின்றன. அதை பெறுவதற்காக நாம் எவ்வாறு கஷ்டப்பட்டோம் என்பதை தெரிந்து கொண்டால் தான் அதன் அருமை நமக்கு புரிந்தால் தான் இதை விட்டு விடக்கூடாது என்ற உணர்வு ஏற்படும். ஏனென்றால் நான் பெற்ற இந்த உரிமைகளை நம் கையில் இருந்து பிடுங்கிக் கொண்டு போகக்கூடிய ஒரு கூட்டம் தான் அங்கே மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

யார் ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்ற தேர்தல்!

தமிழ்நாட்டில் ஒரு இடம் கிடைத்து விடாதா என்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது பெரியாருடைய மண். இதிலிருந்து ஒரு தூசியை கூட அவர்கள் எடுத்து சென்று விட முடியாது.

ஆனால் இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் சொல்கிறேன்... முதலமைச்சர் தளபதி அவர்கள் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவிலே கூறியதை இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் என்பது யார் ஆட்சிப் பொறுப்புக்கு வர வேண்டும் என்பதை விட யார் வரக்கூடாது, யார் வந்து விடக்கூடாது என்பதை நிர்ணயிக்க வேண்டிய தேர்தல். ஏனென்றால் நாம் கஷ்டப்பட்டு வாங்கி இருக்க கூடிய இட ஒதுக்கீடு உரிமைகள், நமக்கான கல்வி, சுயமரியாதை, நம்முடைய அடையாளம் எல்லாவற்றையும் அடித்து உடைத்து நொறுக்கி விட வேண்டும் என்றும்... நாம் கட்டி எழுப்பி இருக்கக்கூடிய இந்த கோபுரத்தை உடைத்து விட வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு இம்மியளவும் நாம் இடம் கொடுத்து விடக்கூடாது.

இதுதான் தலைவர் கலைஞரின் நூற்றாண்டிலே அவருக்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய நன்றி கடனாக இருக்கும் என்பதை நினைவில் நிறுத்திக் கொண்டு தேர்தல் பணிகளை இன்றே துவக்க வேண்டும்"

இவ்வாறு துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. சிறப்புரையாற்றினார்.